இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயம்
கண்டி
****

ஊடக வெளியீடு

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கை தோட்டத் தொழிலாளர் கல்வி அறக்கட்டளையின் **(CEWET)** புலமைப்பரிசில் வழங்குவதற்காக தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த புலமைப்பரிசில்கள் க.பொ.த. உயர்தரம், இளங்கலைப் படிப்புகள் மற்றும் இலங்கையில் உள்ள வேறு எந்த அரச தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் தொழிற்கல்வி/தொழில்நுட்பக் கல்வி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

2. க.பொ.த. சாதாரண தரம் (குறைந்தபட்சம் 6 சிறப்பு சித்திகளுடன் ) அல்லது உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 25 வயதுக்கு குறைவானவர்கள் இந்த உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப் படிவங்கள் பிறப்புச் சான்றிதழின் நகல், க.பொ.த. சாதாரண தரம் அல்லது க.பொ.த. உயர்தர பெறுபேற்று சான்றிதழின் நகல், பெற்றோரின் சமீபத்திய சம்பளச் சீட்டு மற்றும் பெற்றோரின் தொழில் தொடர்பான தோட்டக் முகாமையாளரின் சான்றிதழ் ஆகியவற்றுடன் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் இணையத்தளமான www.ahcikandy.gov.in மற்றும் கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் இணையத்தளமான www.hcicolombo.gov.in ஆகியவற்றிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

3. விண்ணப்பப் படிவங்களை இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம், இல. 01A, மஹாமாய மாவத்தை, கண்டி மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம், 36-38, காலி வீதி, கொழும்பு-03 ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் ICE பிரிவு, இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயம், இல. 01A, மஹாமாய மாவத்தை, த.பெட்டி 47, கண்டி அல்லது கௌரவ செயலாளர், சிவெட் c/o இந்திய உயர் ஸ்தானிகராலயம், த. பெட்டி 882, கொழும்பு - 03 என்ற முகவரிக்கு **ஏப்ரல் 30, 2022** அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

5. மேலதிக தகவல்/தெளிவுகளுக்கு, தயவுசெய்து 081-2222652/2223786 என்ற தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்ளவும் அல்லது ice.kandy@mea.gov.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

*****

**கண்டி**
**01 ஏப்ரல் 2022**